DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ராக்கு (Pw.5)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2rd day of March 2026

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் பூம்பிடாகையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனது அக்கா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 3வருடத்திற்கு முன்பு எனது அக்காவை பார்ப்பதற்காக உளுத்திமடைக்கு மாலை 5மணிக்கு வந்திருந்தேன். நான் வெளியில் சென்றிருந்தபோது எனது அக்காவின் வீட்டிற்கு முன்பு வீதியில் இடப் பிரச்சனை சம்பந்தமாக நாகமலையும், லெட்சுமியும் எனது அக்கா லெட்சுமியை கம்பால் தலையில் அடித்தார்கள். எனது அக்கா கீழே விழுந்தவுடன் வந்துவிட்டேன். ஜெயா மற்றும் அவரது மகனும் கீழே கிடந்தார்கள். நான் அவர்களை தூக்கினேன். எதிரிகள் ஜெயாவை அடித்ததாக கூறினார்கள். காயம்பட்ட லட்சுமி, ஜெயா மற்றும் அவரது

மகனை ஆகியோரை தர்மராஜ் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சேர்த்து பின்பு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் காயம்பட்டவர்களை பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். போலிசார் சம்பவம் நடந்து எவ்வளவு நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் அருப்புக்கோட்டைக்கு நான் பார்க்கச் சென்றபோது விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் சம்பவம் பற்றி கேள்விபட்டுதான் போலிசாரிடம் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மிகைப்படுத்தி சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் யார் யாரை அடித்தார்கள் என்றும் நான் பார்க்கவில்லை என்றாலும் எதிரிகள் மீது பொய்யாக புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கவுதமி (Pw.4)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2rd day of March 2026

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் உளுத்திமடையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 28.12.2022ம் தேதியன்று மாலை 5மணியளவில் நான் எனது வீட்டில் வீடு கட்டும் வேலையை செய்து கொண்டிருந்தேன். எதிரி லட்சுமி என்பவர் என்னிடம் வீடு கட்டுவதில் இடப்பிரச்சனை சம்பந்தமாக சத்தம்போட்டுக் கொண்டிருந்தார். எதிரி லெட்சுமி எனது மாமியார் அசா1 லட்சுமியை தலைமுடியை பிடித்து கீழே தள்ளியவுடன்அவரது கணவர் நாகமலை கம்பால் எனது மாமியாரின் வலது பக்க தலையில்

அடித்துவிட்டார். சத்தம் கேட்டு எனது அக்கா ஜெயா சென்றபோது எதிரி பாலமுருகன், மணிகண்டன் ஆகிய இருவரும் எனது அக்காவின் தலைமுடியை பிடித்து இழுத்து ஓடி வந்தவள் என்று சொல்லி தேவுடியா முன்ட, அவுசாரி முன்ட, ஒன்டிகட்ட இவள அடிச்சா யார் கேட்பா என்று ரோட்டில் வைத்து திட்டி கீழே தள்ளி காலால் மிதித்தார்கள். சத்தம் கேட்டு நானும் எனது மாமா தர்மராஜீம் வந்து பார்த்தபோது சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். எனது மாமியார் லட்சுமி, ஜெயா ஆகியோர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

எனது சொந்த ஊர் கள்ளிக்குடி ஆகும். எனக்கு 2012ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது சொந்த ஊருக்கு அடிக்கடி சென்று வரும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். எனது மாமியாருக்கும், எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அது சம்பந்தமாக நானோ, எனது மாமியாரோ சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் அருகில்தான் உள்ளது. சம்பவம் பற்றி யார் தகவல் சொன்னார்கள் என்றால் சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தேன். நான் பார்க்கும்போது எனது மாமியாரும், ஜெயாவும் கீழே கிடந்தார்கள் என்றால் சரிதான். நான் சென்று சண்டையை விலக்கிவிட்டேன் என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்தில் எவ்வளவு நபர்கள் இருந்தார்கள் என்றால் 4, 5 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவ இடத்திற்கு அருகில் வீரன், பிச்சையம்மாள், மாணிக்கம், இளங்கோவன் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை

விசாரித்தால் சம்பவம் பற்றி உண்மை தெரியவரும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் எத்தனை நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள் என்றால் 2, 3 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையில் நானும் எனது மச்சானும் சத்தம் கேட்டு ஓடி வந்து சண்டையை விலக்கிவிட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அசா3 தர்மராஜ் தனது முதல் விசாரணையில் நான் சண்டையை விலக்கிவிட்டதாகவோ, ஆம்புலன்சில் ஏற்றிவிட்டதாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. புகார் தாரர் எனது மாமியார் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்த்திருந்தால் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. எனது மாமியார்தான் அளவு கல்லை பிடுங்கி பிரச்சனை ஏற்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.